# போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பு இலங்கையில் கிறிஸ்தவம்

வண.ஞா.பிலேந்திரன்

**ஆய்வுச்சுருக்கம்**

*போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் கிறிஸ்தவம் இருந்தமைக்கான வரலாற்றுச் சான்றுகள் முன்வைக்கப்பட்டு. இதன் செயல் நிலைச் சாத்தியத்திற்கான காரணிகள் ஆராயப்படுகின்றன. தோமாவின் இந்திய வருகை, இலங்கையில் இதன் பிரதிபலிப்பு, கொஸ்மஸ் இன்டி.கொப்பிலிஸ்ரஸ் எழுதிய ஆவணச்சான்று, சிகிரியின் கதை என்னும் இலக்கியத்தில் காணப்படும் குறிப்புகள், அனுராதபுரத்தில் அகழப்பட்ட பாரசீகச் சிலுவை, இக்காலத்திற்குரிய தங்க நாணயத்தில் பதிக்கப்பட்ட சின்னங்கள், யாழ்ப்பாணத்தில் அகழப்பட்ட வெள்ளி நாணயம் என்பவற்றை என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.*

## 1. புராதன இலங்கையில் கிறிஸ்தவம்

இலங்கைத் திருச்சபை வரலாற்று ஆய்வினை மேற்கொள்ளும் தற்கால வரலாற்று ஆசிரியர்கள் கி.பி. நவம்பர் மாதம் 1505[1]ஆம் ஆண்டு இடம்பெற்ற போர்த்துக்கேயருடைய இலங்கைக்கான வருகைக்குப் பின்பே இலங்கைத் திருச்சபை வரலாறு ஆரம்பமானது என்னும் கருத்தைப் பொதுவாக முன்வைப்ப துண்டு. எனினும் கி.பி.6 ஆம் நூற்றாண்டிலேயே இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார் கள் என்பதற்குப் புராதன ஏடுகளையும், அகழ்வாய்வுத் தடயங்களையும் சான்றாக முன்வைத்து வரலாற்று ஆசிரியர்களால் பொருள் விளக்கம் கூறப்படுகின்றது.[2]

இலங்கையின் கிறிஸ்தவத்தின் ஆரம்பம், பரம்பல் பற்றிய ஆய்வு தென்னிந்தியாவில் கிறிஸ்தவத்தின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றின் பின்னணியிலும், இலங்கையுடன் தென்னிந்தியா விற்கு நிலவியிருக்கக்கூடிய தொடர்புகளின் செயல்நிலைச் சாத்தியத்தின் பின்னணியிலும் நோக்கப்பட வேண்டியது. திருத்தூதர் காலத்திலிருந்தே தென்னிந்தியாவில் கிறிஸ்தவம் பரவியிருக்கிறதென்பது ஒரு சாரார் முன்வைக்கும் கருத்து. அதாவது திருத்தூதர்களில் ஒருவரான தோமா தென்னிந்தியாவிற்கு வருகை தந்து கிறிஸ்தவத்தைப் பரப்பி மறை சாட்சிய மரணத்தைத் தழுவிக்கொண்டார் என்பதாகும். எனினும் இக்கருத்து ஆய்விற்கும், கருத்து வேறுபாடுகளுக்கும் உட்பட்ட விடயமாகவே காணக்கிடக்கின்றது.[3] திருத்தூதர் தோமா தென்னிந்தியா வந்தமைக்கான செயல் நிலைச் சாத்தியத்தைப்பற்றி இங்கு ஆய்வோம்.

கிரமமான பருவ காலமாற்றங்களின் போக்கும், அவற்றோடு தொடர்புடைய பருவக் காற்றின் மாற்றங்களும், கடற் பிரயாணத்திற்கு பருவக்காற்றின் பயன்பாடு பற்றிய அறிவும், அனுபவமும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வாணிபர்கள் இந்து சமுத்திரத்தைச் சூழவுள்ள நாடுகளுக்கு வருகை தந்து இந்நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, வாணிபத்தை

வளர்த்தமை இக்கருதுகோளை ஏற்றுக்கொள்ள ஏதுவாகவே அமைந்துள்ளது.[4] இவற்றின் விளைவுகள் வாணிபத் தொடர்புகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படாது, கலாசாரப் பரிமாற்றம், புதிய சிந்தனைக் கோட்பாடுகளின் பரம்பல், சமய நம்பிக்கைகளின் பறைசாற்றலும் ஏற்பும் என இடம்பெற வழிவகுத்தன.[5] முதலாம் நூற்றாண்டு முதல் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், இந்தியாவிற்கும் இடையே நிலவிய கடல், தரை வழிப்பாதைகள் திருத்தூதரான தோமா இந்தியா வந்து இந்திய மண்ணில் தமது பாதம் பதித்து பணியாற்றியுள்ளார் என்பது செயல் நிலைச் சாத்தியமான நிகழ்வாகக் கொள்ளப் படக் கூடியதொன்றாகவே தென்படுகிறது. தென் இந்தியாவில் கேரள மாநிலப் பகுதியான கிரங்கனூர், கொயிலோன் ஆகிய இடங்களில் யூதர்கள் வாணிபம் காரணமாக கி.பி. முதலாம் நூற்றாண்டில் குடியிருந்தார்கள் என்றும், எனினும் இந்தியாவிற்கு யூதர்கள் புலம்பெயர்ந்த சரியான ஆண்டினை குறிப்பிட முடியாதுள்ளது எனவும் வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.[6]

திருத்தூதர் தோமாவின் தென் இந்திய வருகை, பணி, மறைசாட்சியாக மரணித்தமை, அவரது கல்லறை அமைந்திருந்தமை ஆகிய விடயங்கள் பற்றிக் கூறும் போதிய நம்பகரமான வரலாற்றுச் சான்றாதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை. எனினும் இவ்வாறான வரலாற்றுச் சம்பவங்கள் செயல்நிலைச் சாத்தியமற்றவை என நிராகரிக்கப்பட முடியாத விடயமாகவும் தென்படுகின்றது. ஏனெனில் திருத்தூதர் தோமா உலகில் வேறு எங்காவது பணியாற்றி யது பற்றியோ, அல்லது அவரது வாழ்வுடன் தொடர்புடைய நிகழ்வுகள் உலகில் வேறு எங்கும் இடம்பெற்றமை பற்றியோ, எந்த ஏட்டிலோ பாரம்பரியத்திலோ உரிமை பாராட்டப்பட வில்லை.[7] மேற்கூறப்பட்ட விடயங்களை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது முதலாம் நூற்றாண்டில் திருத்தூதர் தோமாவின் பணி தென்னிந்தியாவில் இடம்பெறக்கூடிய தொன்றாகவே ஏற்றுக்கொள்ளப்பட செயல் நிலைச் சாத்தியங்கள் இடமளிப்பதோடு, கர்ண பரம்பரை நிலைப்பாடுகளும் பக்கபலச் சான்றாக அமைகின்றன.

இந்தியாவிற்கு கிறிஸ்தவத்தின் வருகையும், பரம்பல் பற்றியும் மூன்று நிலையான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன:

1. திருத்தூதர் தோமா இந்தியாவில் கிறிஸ்தவத்தை நிறுவியவர்.
2. திருத்தூதர் தோமாவுடன் இணைந்து திருத்தூதர் பத்தலோமேயும் இந்தியாவில் கிறிஸ்தவத்தை நிறுவினார்.
3. கிழக்கு சீரிய அல்லது பாரசீகத்தைச் சார்ந்த வாணிபர்களும், கிறிஸ்தவ மறைப்பணியாளர்களும் இந்தியாவில் கிறிஸ்தவத்தை நிறுவிப் பரப்பினர்.[8]

திருத்தூதர்கள் தாம் இந்தியாவில் கிறிஸ்தவத்தை நிறுவினர் என்னும் கருத்தை முன்வைக்கும் வரலாற்று ஆசிரியர்கள், கிழக்கு சீரிய சபையினர் இந்தியாவில் கிறிஸ்தவம் மீள் வலிமை பெறும் நிலைக்கு தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர் என்னும் கருத்தையும் வலியுறுத் தத் தவறவில்லை.[9]

திருத்தூதர் தோமா கேரளாவிலுள்ள கிரங்கனூர் அருகிலுள்ள மாலியங்கரா என்னும் தீவில் கி.பி 52 ஆம் ஆண்டு முதல் கடல்வழிப்பயணமாக வந்திறங்கினார் எனக்

கேரளாவிலுள்ள கிறிஸ்தவப் பாரம்பரியம் கூறுகின்றது.[10] கேரளாவில் ஆரம்பத்தில் பணியாற்றிய திருத்தூதர் தோமா அங்கிருந்து தமிழக மயிலாப்பூருக்கு வந்து பலருக்கும் திருமுழுக்களித்த பின்பு சீனா நாட்டிற்குச் சென்றார். சீனாவில் கபாலி எனப்படும் தற்போதைய பீகிங் என்னுமிடத்தில் பலரைக் கிறிஸ்தவத்தில் இணைத்து செபக்கூடங் களையும் அமைத்தார். மீண்டும் தென் இந்தியா வந்து மயிலாப்பூர், மாலியங்கரா, கிரங்கனூர், கொல்லம், காயல், நிராணம், கொக்கமங்கலம், கோட்டக்காயம், பாலையூர் ஆகிய இடங்களில் கிறிஸ்தவ மதத்தை நிறுவியும், பரம்பியும் பலரையும் கிறிஸ்தவ மறையில் இணைத்தும் கொண்டார்.[11]

மேலும், சிந்து தேச மண்ணில் அரண்மனை அமைப்பதற்காக விடுத்த அழைப்பின் பெயரில் தோமா இந்தியா வந்தார் என எதேசா, அலெக்சாந்திரியா பாரம்பரியங்கள் கூறுகின்றன.[12]

மாறாகசோரன் என்னும் தென்னிந்திய மன்னன் சிறந்த அரண்மனை அமைக்கும் பொருட்டு பலஸ்தீனத்திலிருந்து தோமாவை அழைத்தான் எனத் தமிழ் நாட்டுகேரள நாட்டார் பாடல்கள் கூறுகின்றன.[13] தோமா கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் பணியாற்றினார் என்னும் விடயம் காலாகாலமாகப் பேசப்படடு வருகின்றது. ஆனால், தோமா தென்னிந் தியாவில் மறைப்பணி செய்யவில்லையென கேரளாவைச் சேர்ந்த தோமா கிறிஸ்தவர்கள் சபையிலுள்ள T.K. யோசப் என்னும் வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.[14] அதேவேளையில், மயிலாப் பூரில் அடக்கம் செய்ததாகக் கொள்ளப்படும் தோமாவின் உடல் எதேசா (Edesa) என்னும் இடத்திற்கு மாற்றப்பட்டதாக சீரிய வரலாறு கூற, மாற்றப்படவில்லை எனக் கேரள, மயிலாப்பூர் பாரம்பரியங்கள் கூறுகின்றன.[15]

திருத்தூதர் தோமா இந்தியாவை அடைவதற்கு மேற்கொண்ட பயணப்பாதை, பணியாற்றிய சரியான காலம், அவர் பணியாற்றிய பகுதிகளில் ஆட்சி செய்த மன்னர்கள், அவரது மரணத்துக்கான காரணம், அவரது அடக்கம் இடம்பெற்ற இடம், தற்போது அவரது உடல் பேணப்படும் இடம் போன்ற விடயங்கள் தொடர்பாக பல மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற போதும், அவர் தமிழகம் வந்து கிறிஸ்தவத்தை நிறுவினார் என்பதற்கு போதிய வரலாற்றுச் சான்றுகள் உண்டு என்பதனைப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இக்கருத்தை வலுவாக ஆதரிப்பவர்களாக ஜே.என்.பார்குஸார் (J.N.Farquhar) அடால்ப் மெட்லிகோட் (Adolf Medlycott) இயூயின் திஸ்ரான்ட் (Eugene Tisreant) போன்ற வரலாற்று ஆசிரியர்களைக் குறிப்பிடலாம். தோமாவை "இந்திய அப்போஸ்தலர்" என அழைப்பது மிகப்பொருத்தமாகும் என்பது இவர்களது கருத்தாகும்.[16]

திருத்தூதர் தோமாவின் இந்தியப் பணி பற்றி வரலாற்று ஆசிரியர் ஈ.ஆர்.ஹம்பி (E.R.Hambye) முன்வைக்கும் கருத்து மிகப் பொருத்தமானதாகவே தென்படுகின்றது. புனித தோமாவின் இந்திய வருகை ஒரு பாரம்பரியச் செய்தியாகவிருப்பினும், அதை வரலாற்றுச் செய்தியாக ஏற்பதில் சிக்கல்கள் இருக்கின்றன. தோமாவின் இந்திய வருகை பற்றிய பாரம்பரியம் மிகவும் பிறப்பட்ட காலத்திற் தோன்றியது. இப்பாரம்பரியம் தொடர்பான ஆவணங்கள்

இன்னும் முழுமையாக ஆய்வு செய்யப்படவில்லை. தோமா இந்தியா வந்தார் என்பது பற்றிய கருத்து இந்தியாவிலும், மேற்கு நாடுகளிலும் 4 ஆம் நூற்றாண்டிலிருந்தே நிலவிவருகிறது. கிறிஸ்துவிற்குப் பிற்பட்ட வரலாறு சார்ந்த முதல் 300 ஆண்டுகள் பற்றிய இடைவெளி நிரப்பப்படாமலேயே உள்ளது. இதற்கு தென்னிந்தியா பற்றிய பாரம்பரியங்கள் ஆராயப்படுவதோடு, கேரளம், மைலாப்பூர் ஆகிய பகுதிகளில் அகழ்வு ஆய்வுகள் புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டும்.[17] தோமாவின் இந்திய வருகை, பணி பற்றிக் கூறும் ஆய்வாளர்கள், கணிப்புகள், பாரம்பரியங்கள், மேலும் இவற்றுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களை ஒட்டுமொத்தமாக நோக்கும் போது, வரலாறு ஆசிரியர்களின் கணிப்பின்படி தோமாவின் தென் இந்தியப் பயணமும், பணியும் வரலாற்று நிகழ்வாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிகழ்வாகவே தென்படுகின்றது.[18]

புனித தோமா பற்றிய விடயம் இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுடன் என்ன நிலையில் தொடர்புள்ளது என்னும் வினா இங்கு எழுப்பப்படலாம். தென்னிந்திய, இலங்கை புவியியல் அமைவிடங்களைக் கருத்திற் கொள்ளும்போது இவற்றுக்கிடையில் காணப் படும் மிகவும் குறுகிய தூரம் காரணமாகவும், இரண்டுக்குமிடையில் நிலவிய கலாசாரத் தொடர்புகள் காரணமாகவும், இந்தியா வந்த தோமா இலங்கையும் வந்திருக்கலாமா என்னும் வினா எழுகின்றது. எனினும் தோமா இலங்கை வந்தார் என்பதற்கு எவ்வாறான வரலாற்றுச் சான்றும் இல்லை. மேலும் தோமா தென்னிந்தியாவில் ஆற்றிய நற்செய்திப்பணியின் தாக்கம் இலங்கை வரை எட்டியிருக்குமா என்பது பற்றியும் எந்த வகையான விடயமும் உறுதியாக கூறமுடியாதுள்ளது.

## 2. கி.பி.325 – நிசேயா பொதுச்சங்கம்.

நிசேயாவில் கி.பி.325 இல் இடம்பெற்ற திருச்சபையின் பொதுச்சங்கத்தில் இலங்கையிலிருந்தும் ஒரு ஆயர் பங்கு கொண்டார் என்பது சிலரது கருத்தாகும். எனினும் இது வரலாற்று சான்றுகளை ஆதாரமாகக் கொண்ட கருத்தாகத் தென்படவில்லை. பொதுச்சங்கத்தில் பங்குகொண்ட ஆயர்களின் கையொப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டபோது ஒரு ஆயரின் கையொப்பம் Heraclius Zelensis அல்லது Zelensis என்றே காணப்படுகின்றது. Zelonesis அல்லது Zelensis என்பது இலங்கையைக் குறிப்பிடுவதாகச் சிலராற் கருத்துக் கூறப்படுவதுண்டு. ஆனால் இது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தென்பதை ஆய்வு விளக்கங்கள் சுட்டி நிற்கின்றன. இலங்கை Seylon, Zeilan, பின்பு Ceylon என்று அழைக்கப்பட்டது. கிரேக்கர்களுக்கு முற்றாக அறியப்படாத ஒன்றாகும். கிரேக்கர்கள் (Taprobane) தப்பிரபான் என்றே இலங்கையை அழைத்தார்கள். நிசேயா பொதுச்சங்கத்தில் பங்குகொண்ட ஆயர்கள் தமது கையொப்பமிடும் போது அதனுடன் தாம் பணிபுரியும் நிர்வாகப் பகுதியையும். அதனுடன் இணைத்து குறிப்பிட்டிருக்கிறார்கள். Zela என்னும் பகுதியான சின்ன ஆசியாவிலுள்ளது என்பதும், ஆயருடைய ஒரு நிர்வாகத்திற்கு உட்பட்டதென்பதும், சின்ன ஆசியாவிலுள்ள கிறிஸ்தவ சபைகளைப்பற்றிய ஆய்விலிருந்து அறியக்கூடியதாயுள்ளது. எனவே இலங்கையிலிருந்து ஒரு ஆயர் நிசேயா (கி.பி. 325) இல் பங்குகொண்டார் என்னும் கருத்து ஆய்வின்படி முற்றாக நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்றாகவே தென்படுகின்றது.[19]

3. கொஸ்மஸ் இன்டிக்கொப்பிலிஸ்ரஸ் (Christianike Typographia) Cosmas Indicopleustus

இலங்கையில் கிறிஸ்தவர்கள் என்னும் வரலாற்று நிகழ்வு பற்றிக் குறிப்பிடும் ஏடுகளின் தோற்றத்தில் காலத்தால் முற்பட்டதாகவும், சான்றின் நம்பகத் தன்மையில் முக்கிய சான்றாகவும் கொஸ்மஸ் இன்டிக்கொப்பிலிஸ்ரஸ் என்பவர் எழுதிய Christianike Typographia (The Christian Topography) என்னும் ஆவணம் விளங்குகின்றது. தமிழில் இது "கிறிஸ்தவ சபைகளின் விவரணம்" என்று அழைக்கப்படுகின்றது. இதில் கூறப்பட்டுள்ள வரலாறு தொடர்பான விடயங்கள் கூடிய நம்பகத் தன்மையுள்ளதாகக் கணிக்கப்பட்டு மேலும் இந்தியாவில் கிறிஸ்தவம் பற்றிக் கூறும் முக்கிய ஆவணங்களில் ஒன்றாகவும் இது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

கொஸ்மஸ் என்பவர் அலெக்சாந்திரியா நாட்டைச் சேர்ந்த கிரேக்க வாணிபரும், கடற் பயணியுமாவார். கி.பி. 520 –525 காலப்பகுதியில் இந்து சமுத்திரத்தைச் சூழ்ந்த நாடுகளுக்குக் கடற்பயணத்தை மேற்கொண்டதோடு அந்நாடு கள் பற்றிய தகவல்களையும் சேகரித்துள்ளார். தமது வாழ்வின் பிற்காலத்தில் கிறிஸ்தவத் துறவற சபை ஒன்றில் இணைந்து, தமது கடற்பயணத்தின்போது தாம் சேகரித்த குறிப்புக் களைக் கொண்டு (Christianike Typographia) என்னும் நூலைக் கிரேக்க மொழியில் எழுதினார். Indicopleustes என்னும் இணைப்பெயர் இந்தியக் கடற்பரப்பில் இவர் மேற்கொண்ட பெரும் கடற்பிரயாணங்கள் காரணமாக இவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயராகும்.[20] இவரது நூலில் இலங்கையில் கிறிஸ்தவம் பற்றி இரண்டு பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் கிறிஸ்தவம் பற்றி ஆய்விற்கு இரண்டு பகுதிகளும் மிகவும் முக்கியம்வாய்ந்த குறிப்புகளைக் கொண்டுள்ளன.

### இலங்கையில் கிறிஸ்தவம் I

இப்பகுதியில் இடம்பெறும் முக்கிய விடயங்களை நோக்குமிடத்து உலகெங்கும் நற்செய்தி போதிக்கப்படுவதாகவும், இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள "தப்பிரபான்" என்னும் இடத்தில் ஒரு கிறிஸ்தவ சபை இருப்பதாகவும், நாட்டில் வேறு இடங்களில் கிறிஸ்தவ சபைகள் இருப்பது பற்றி தமக்குத் தெரியாது எனவும், ஒரு குருவானவர் தலைமையில் இக் கிறிஸ்தவசபை இயங்குவதாகவும் கொஸ்மஸ், குறிப்பிட்டுள் ளார்.[21] இவற்றைத் தாம் சென்ற இடங்களில் கண்ட, கேட்ட செய்திகள் எனவும், இவற்றிற்குத் தாம் உறுதி கூறுவதாகவும் எழுதியுள்ளார்.[22]

### இலங்கையில் கிறிஸ்தவம் II

கொஸ்மஸ் குறிப்பிடும் இரண்டாவது பகுதியை நோக்குமிடத்து இதில் இலங்கை பற்றிப்பல விடயங்கள் குறிப்பிட்டுள்ளதை அறிய முடிகின்றது. இலங்கையின் பரப்பளவு, அரசியல் நிலைமை, இங்கு காணப்படும் தாவரங்கள் எனப் பல விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டாலும், கிறிஸ்தவம் பற்றிக் குறிப்பிட்டுள்ள பகுதி எமது ஆய்விற்கு மிக முக்கியமானதாகத் தென்படு கின்றது.

மேற்குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் முக்கிய விடயங்களை நோக்குமிடத்து, இத்தீவில் பாரசீகத்திலிருந்து குடியேறியுள்ள மக்களைக் கொண்ட கிறிஸ்தவ சபையுண்டு; இவர்களுக்கு வழிபாடுகள் நடத்துவதற்கு

பாரசீகத்தில் நியமனம் பெற்ற ஒரு குருவும், திருத்தொண்டனும் (தியாக்கோனும்) இருக்கின்றனர். வழிபாடுகள் சிறப்பாக இடம் பெறுகின்றன; சுதேச மக்களும், மன்னனும் வேற்று மதத்தைக் கடைப்பிடிக்கின்றனர் ; இங்கு பல விகாரைகளும் காணப்படுகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் பகுதியில் வாணிபம் தொடர்பாக இங்கு வருகை தரும் கப்பல்கள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.[23] இவை பாரசீகம், தென் அரேபியா,செங்கடலை அண்டிய பகுதியிலிருந்து வருவதாகவும் இவை நங்கூரமிடும் துறை (Mahatittha) மாதோட்டம் எனவும் வரலாற்று ஆசிரியர்கள் விளக்கம் கூறுகின்றனர். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மாதோட்டத்தில் கிறிஸ்தவ ஆலயம் இருந்தது என்பது பற்றி அறிக்கைகள் காணக்கிடக் கின்றன.

கொஸ்மஸ் இலங்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள இரண்டு பகுதிகளையும் பற்றி இலங்கைத் திருச்சபை வரலாற்றாசிரியர் மாட்டீன் கெறே அவர்கள் தமது ஆய்வுக் கணிப்புகளைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை யில் இருந்த கிறிஸ்தவ சபைக்கும், பாரசீகத்தி லிருந்த கிறிஸ்தவ சபைக்கும் நெருங்கிய தொடர்புகள் நிலவியதை அறிய முடிகிறது. தென்னிந்தியாவில் காணப்பட்ட கிறிஸ்தவ சபை பாரசீகத்தின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்ட தாகத் தென்படுகிறது. தென்னிந்தியாவில் பாரசீக சடங்கு முறைகளும், மொழியும் வழிபாட்டில் இன்றுவரை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும் பாரசீகக் கிறிஸ்தவ சபைகள் தாம் திருத்தூதர் தோமாவினால் நிறுவப்பட்ட சபைகள் என உரிமை பாராட்டியது கவனத்திற் கொள்ளத்தக்கது.[25].

இலங்கையில் காணப்பட்ட கிறிஸ்தவ சபையினர் சமயம் பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. வாணிபம் தொடர்பான செயற்பாடுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி க்கொண்டு இலங்கையில் குடியிருந்த பாரசீகக் கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் ஆன்மீகத்தேவை யை நிறைவு செய்யும்படியாகவே குறிப்பிட்ட கிறிஸ்தவ சபை இலங்கையில் செயற்பட்டிருக் கின்றது. இலங்கையில் குடியிருந்த கிறிஸ்தவ சபை பற்றியும், அதன் செயற்பாடுகள் பற்றியும் கொஸ்மஸ் கூறும் செய்திகள் யதார்த்தமான வையாகவே தென்படுகிறது. இலங்கையில் குடியிருந்த கிறிஸ்தவ சபை பற்றிக் குறிப்பிட்ட கொஸ்மஸ் இக்குறிப்பிட்ட கிறிஸ்தவ சபை இலங்கையில் வாழ்ந்த இடத்தின் பெயர், மக்கள் தொகை பற்றிய தகவல்களைக் குறிப்பிடத் தவறியுள்ளார். எனினும் ஒரு குருவும் ஒரு திருத்தொண்டனும் இங்கு தங்கியிருந்து பணிசெய்யும் அளவிற்கு பெரிய சபை ஒன்று இங்கு இருந்திருக்கின்றது என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியது.[26]

பாரசீக கிறிஸ்தவ சபைகளும் அவற்றுடன் தொடர்புள்ள இணைச் சபைகளும் (இலங்கையிற் காணப்பட்ட சபை உட்பட) நெஸ்ரோறிய சபையாகவே தம்மை அழைத்துக் கொண்டனர். ஆரம்பகாலம் முதல் நெஸ்ரோறியத் திருச்சபை அந்தியோக்கிய சிந்தனை மரபுகளை ஏற்று அதனால் வளர்க்கப்பட்ட சபையாகவே விளங்கியிருக்கின்றது. கி.பி. 431 இல் எபேசு பொதுச்சங்கத்தில் நெஸ்ரோறியஸ் முன்வைத்த கிறிஸ்துவியல் பற்றிய கருத்துக்கள் கடும் கண்டனத்திற்குட்பட்ட பேதகமாகப் பிரகடனப் படுத்தியும் பாரசீகக் கிறிஸ்தவர்களால்

தொடர்ந்து நெஸ்ரோறியஸ் ஏற்றுக்கொள்ளப் பட்டவராகவே காணப்படுகின்றார்.[26]

ஐந்து முதல் எட்டு நூற்றாண்டுகள் வரையிலான காலப்பகுதியில் பாரசீக கிறிஸ்தவ வாணிபர்கள், இஸ்லாமிய மதத்தினர் ஊடுருவல் மத்தியிலும் துணிகரமாகச் செயற்பட்டிருக் கிறார்கள். எனினும் வரிச்சுமை, தமது சொந்த மண்ணிலேயே கிறிஸ்தவர்கள் இரண்டாம் தர மக்களாக நடத்தப்பட்டமை, இஸ்லாமியரால் வழங்கப்பட்ட சமூக, பொருளாதார ஊக்குவிப்பு காரணமாக கிறிஸ்தவம் படிப்படியாக பாரசீகத் திலும் அதனுடன் தொடர்புள்ள ஏனைய இடங்களிலும் குலைந்தது.[27] எனினும் ஆசியாவில் ஏனைய பகுதிகளுடன் ஏற்படுத்திய தரைவழிப் பாதை, கடல்வழிப்பாதை காரணமாக ஏனைய ஆசிய நாடுகளில் பரவியமையும் பல இடங்களில் வழிபாட்டு மையங்கள் தோன்றியமையும் கி.பி.635 காலப்பகுதியில் சீனாவின் தலைநகர் வரையும் பரவியிருந்த மையும் குறிப்பிடத்தக்க தாகும்.

இலங்கை வரலாறு கூறும் மகாவம்சம் என்னும் இலக்கியத்தில் புராதனகால இலங்கையில் பாரசீகக் கிறிஸ்தவம் பற்றிய எந்தவித குறிப்பும் இடம்பெறாமை பெருங்குறை யாகவே படுகின்றது. கி.பி. 5ஆம் நூற்றாண்டு காலப்பகுதியின் நிகழ்வுகள் பற்றிக்கூறும் சூளவம்ச 12ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியி லேயே பௌத்த துறவிகளால் தொகுக்கப் பட்டதாகும். பௌத்த துறவிகள், பௌத்த மதத்தை வளர்த்துப் பரப்பிய துறவிகளின் புகழ் பரப்பவே இதை ஆக்கினார்கள், இன்றைய ஆய்வாளர்கள் பலருக்கு முக்கியமாகத் தோன்றும் பல விடயங்கள் இவற்றைத் தொகுத்த பௌத்த துறவிகள் கவனத்தைக் கவரவில்லை எனக் கொள்ளலாம்.[28]

### 4. சிகிரியா பற்றியவை

The Story of Sigiri

மறைந்த பேராசிரியர் செனரத் பறணவி தான (epigraphist) கல்வெட்டுக்களைப் பதித்து விளக்கம் அளிப்பதில் புலமை கொண்டு விளங்கியவர், இவரது மரணத்தின் ஆறு மாதங்களின் பின்பு 1972இல் "சிகிரியின் கதை" (The Story of Sigiri) என்னும் நூல் இவரால் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்ட நூல், ஆங்கிலத்தில் வெளியிடப் பட்டது.

இந்நூல் பற்றிய விடயங்களை நோக்கு மிடத்து, இது 6ஆவது பராக்கிரமபாகு மன்னன் (1412 – 1467) பணிப்பின் பேரிலும், அதே மன்னன் வழங்கிய ஆதரவுடனும், உதவியுடனும் சுமாத்திராத் தீவில் இருந்து இலங்கை வந்த பௌத்தத்துறவி ஆனந்தஸ்தீரவீர என்பவர் பொழிந்த கல்வெட்டு எழுத்தினது மொழி பெயர்ப்பும், பேராசிரியர் பரணவிதான இதற்கு அளித்த விளக்கமுமாகும். கல்வெட்டுப் பொழிவை எழுதுவதற்கான விடயத்தை துறவி உள்நாட்டிலும், தமது நாட்டிலும் காணப்பட்ட பழமை வாய்ந்த ஆவணங்களிலிருந்தே பெற்றிருக்கின்றார். இவர் பாளி, சமஸ்கிருதம், சிங்களம், இலத்தீன், கிரேக்கம், அராபிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தார்.[29] இவ்வாறான எழுத்துக்கள் கற்றூண்களிலும் கற்பாறைகளிலும் பல இடங்களில் காணப்படு கின்றது. 6ஆவது பராக்கிரமபாகு மன்னனின் மரணத்தின் பின்பு அவனது எதிரிகள், பௌத்த துறவி ஆனந்தஸ்தீரவீர கற்றூண்களிலும்,

கற்பாறைகளிலும் பொழிந்த எழுத்துக்களைப் படித்துப் புரிந்துகொள்ள முடியாதவாறு அவற்றின் மீது வேறு எழுத்துக்களைப் பொழிந்தனர்.[30] 8ஆம் பராக்கிரமபாகு மன்னன் (1477– 1489) ஆட்சிக்காலத்தில் பௌத்ததுறவி ஆனந்தஸ்தீரவீர என்பவரின் சீடர்களில் ஒருவர் மன்னனின் அனுமதியுடன், தமது குரு முதலில் பொழிந்த எழுத்துக்களை அதே கற்களின் செங்குத்து நிலையிலும், மூலைவிட்ட நிலையிலும் மீண்டும் பொழிந்தார்.

இவ்விடயம் தொடர்பாக பேராசிரியர் பரணவிதான குறிப்பிடுமிடத்து கற்றூண்களி லும் பாறைகளிலும் பொழிவு செய்யப்பட்ட எழுத்துக்களைப் படித்து பொருள் விளக்கம் கொள்வது சிக்கல் என்றும், இவ்வாறு பொருள் விளக்கம் கூறுமிடத்து பல தவறுகள் ஏற்பட இடமுண்டு என்றும் தமது நூல் மிகவும் அவசரத்தில் செய்யப்பட்டதாகவும் ஏற்றுக்கொள் கின்றார். ஆய்வாளர்கள் மத்தியில் இந்நூல் ஆய்வுத் தரமான நூலாகப் பெரும் வரவேற்பைப் பெறவில்லை.

"The Story of Sigiri" என்னும் நூலின் விடயப்பொருளை ஆராயுமிடத்து, இதில் இலங்கை மன்னர்களின் ஆட்சி, வம்சம் தொடர்பான பல விடயங்கள் பற்றிக் கூறினாலும், கிறிஸ்தவத்துடன் தொடர்பான வையாக இதில் இடம்பெறும் பகுதிகள் எமது ஆய்விற்கு மிக முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. கி.பி.5ஆம், 6ஆம் நூற்றாண்டு காலச் சிங்கள மன்னர்கள் காலத்தில் வேறுநாட்டுக் கிறிஸ்தவர்கள் ஆட்சி நிர்வாகத்தில் உயர் பதவிகளில் பணியாற்றியுள் ளார்கள் என்னும் கருத்தை ஏற்றுக்கொள் வதற்கு ஏதுவான காரணங்களைக் கொண்டு ள்ளதாகத் தென்படுகின்றது.

கல்வெட்டு இலக்கியத்தின்படி தாதுசேன மன்னனின் மக்கள், முகலன் (கி.பி.437 – 491), காசியப்பன் (கி.பி. 491 – 508) ஆகியோரது ஆட்சியின் போது பாரசீகத்தைச் சார்ந்த கிறிஸ்தவன் முறையே பெரிய மிக்காரா, (Migara) சிறிய மிக்காரா (பெரிய மிக்காரா வின் மகன்) என்பவர்கள் மன்னர்களின் படைத் தளபதிகளாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.[31]

இதே ஆவணத்தின் படி முகலன் மன்னன் கிறிஸ்தவத்தையும், பௌத்த மதத்தையும் மாறிமாறித் தழுவியிருந்தான் என்றும், ஒரு கிறிஸ்தவனாகவே இறந்தான் என்றும் கூறப்படுகின்றது. மேலும் முகலன் மன்னன் காலத்தில் இலங்கையில் தங்க நாணயம் செய்யப்பட்டதாகவும், கிறிஸ்தவச் சின்னம் பதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. பேராசிரியர் பரணவிதான கருத்தின்படி வரலாற்றாசிரியர் கொட்றிங்ரன் (H.W.Codrington) எழுதிய (Ceylon coins and currency) என்னும் நூலில், படம் 44 இல் காணப்படும் தங்க நாணயம் இதுவாகும். எனினும் இக்கூற்றிற்கு பேராசிரியர் காரணம் குறிப்பிடவில்லை. கொட்றிங்ரன் இதற்கு விளக்கம் அளிக்கும் போது இதிற்சிலுவைச் சின்னம் காணப்படுவ தாகக் கூறுகின்றார்.[32]

"The Story of Sigiri" என்னும் நூலில் காணப்படும் சில விடயங்கள் தெளிவற்றவை யாகவும், வேறு வரலாற்று நிகழ்வுகளுடன் இணைந்து செல்வதாகவும் தென்படவில்லை.

மன்னன் தாதுசேனன் என்பவனின் மகளைத் திருமணம் செய்த மிக்காரா (Migara) என்பவனும், சீரியக்கிறிஸ்தவக் குரு தோமா என்பவரும் முகலன் மன்னனைக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதில் காட்டிய ஆர்வம் தென்னிந்தியாவில் காணப்பட்ட ஏனைய சீரியக் கிறிஸ்தவர்களிடம் . மதமாற்றம் தொடர்பாகக் காணப்பட்ட செயற்பாடுடன் இணைந்து செல்லவில்லை.[33]

மேலும் கொஸ்மஸ் இன்டிக்கொப்பி லிஸ்ரஸ் அல்லது அவருக்கு இலங்கை பற்றிய தகவல் வழங்கிய சொபாட் (Sopater) என்பவர், முகலன் மன்னனின் மனமாற்றத்தின் 10, 15 வருடங்களில் பின்பே இலங்கை வந்திருந்தார். எனினும் கொஸ்மஸ் எழுதிய நூலில் இந்த விடயம் பற்றிய எந்தவிதமான தகவலும் குறிப்பிடவில்லை. மாறாக கொஸ்மஸ் தமது நூலில் இலங்கையில் ஒரு கிறிஸ்தவக் குழுமமே காணப்படுவதாகவும், மன்னனும், மக்களும் வேறு மதத்தைக் கடைப்பிடிப்பதாகவும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். "The Story of Sigiri" பற்றிய விடயம் மேலும் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டு இதில் கூறப்படுகின்ற விடயங்கள் தொடர்பான புறவய மெய்மை அறியப்பட வேண்டும் என்பது இலங்கைத் திருச்சபை வரலாற்று ஆசிரியர் மார்டீன் கெறே அவர்களின் கருத்தாகும்.[34]

## 5. அனுராதபுரத்தில் அகழப்பட்ட பாரசீகச் சிலுவை

பாரசீகத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இலங்கையில் குடியிருந்திருக்கிறார்கள் என வரலாறு கூறும் ஏடுகளும் கல்வெட்டுக்களும் சான்று கூறுவதாகக் கொள்ளப்படும் போது, இது தொடர்பாக முன்வைக்கப்படும் அகழ்வாய்வுத் தடயங்களும் அவை மூலமாகப் பெறப்படும் முடிவுகளும் மேற்படி எடுகோளை வலியுறுத்தி நிரூபிப்பதாகவே அமைகின்றன. எனினும் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதற்கான தடயங்களும், விளக்கங்களும் தீர்க்கமான முடிவாகக் கொள்ளப்பட முடியாது என்பது மற்றுமொரு கருத்தாகும்.

இதுவரையும் அகழ்வாய்வின் பயனாக இரண்டு தடயப்பொருட்கள் மட்டுமே பெறப்பட்டு ள்ளன. இவை கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிலுவைகள் இவற்றிற்கும் பாரசீக சபைகளுக் கும் நெருங்கிய தொடர்புள்ளதாகக் கொள்ளப்படுகின்றது. எனினும் இவற்றுள் ஒரு சிலுவை மட்டுமே தற்போது அனுராதபுர த்திலுள்ள தொல்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி கி.பி. 1912 இல் அனுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது நீர் சதுர அமைப்பிலான கருங்கல்லுப்பாளம் கண்டெடுக்கப்பட்டது. இதில் செதுக்கப்பட்டி ருந்த சிலுவை மலர் இதழ் வடிவ அமைப்பைக் கொண்டதாகவும், அதிலே காணப்பட்ட சிலுவையின் அடிப்பகுதி சிறுசிறு படிகளைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. அங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆராய்ச்சியை முன்நின்று நடத்திய அகழ்வாய்வாளர் E.R.Ayrton, என்பவர் கணிப்பின்படி இச்சிலுவை போர்த்துக்கேய பாரம்பரியத் திற்குரிய சிலுவை என்றும், இதனால்

போர்த்துக்கேய மதப்பணி அனுராதபுரம் வரையும் ஒரு காலத்தில் பரவியிருக்கலாம்.....[35]. மேலும் அனுராதபுரத்தில் அகழ்வின்போது எடுக்கப்பட்ட சிலுவைக்கும், கொழும்புக் கோட்டையில் 16ஆம் நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட் சிலுவைக்கும், ஒத்த பண்புகள் காணப்படுவதாக தமது கருத்தைக் கூறியுள்ளார். கொட்றிங்கரன் என்னும் வரலாற்று ஆசிரியர் தமது கணிப்பில் அனுராதபுரத்தில் அகழ்வாய்வின்போது கண்டெடுக்கப்பட்ட சிலுவை பாரசீகக் கிறிஸ்தவ சபையினர் பயன்படுத்தும் சிலுவை யெனக் கூறினார்.

மேலும் இவரது கணிப்பின்படி சென்னை தோமா மலையில் காணப்பட்ட சிலுவைக்கும், கேரளாவிலுள்ள கோட்டையம் என்னும் இடத்தில் எடுக்கப்பட்ட சிலுவைக்கும், அனுராதபுரத்தில் அகழ்வு ஆய்வின்போது பெறப்பட்ட சிலுவைக்கும் மிகநெருங்கிய ஒத்த பண்புகள் உண்டு.[36] மாட்டீன்கெறே என்பவரது கருத்துப்படி இச்சிலுவை பலிப்பீடத்தின் பின் அணியில் வைக்கப்பட்டிருக்கலாம். மேலும் சென்னையிலும், கோட்டையத்திலும் கண்டெடு க்கப்பட்ட சிலுவைகள் நான்கு சாண் நீளமும், மூன்று சாண் அகலமும் உள்ளவையாகும். ஆனால் அனுராதபுரத்தில் எடுக்கப்பட்ட சிலுவை 11செ.மீ நீளமும் 6 செ.மீ அகலமும் கொண்டது. சென்னை, கோட்டையம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட சிலுவைக்கும், அனுராதபுரத்தில் எடுக்கப்பட்ட சிலுவைக்கும் இடையே சில சிறிய வேறுபாடுகள் காணப்படினும் இவற்றிற்கிடையில் காணப்படும் ஒத்த பண்புகள் தற்செயலானவையாகத் தள்ளிவிட முடியாது. இதேவேளையில் அனுராத புரத்தில் அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்ட சிலுவையின் சரியான காலத்தை கணிப்பிட முடியாதுள்ளது என்பது வரலாற்று ஆசிரியர்கள் கணிப்பு.

இச்சிலுவையானது கொஸ்மஸ் என்னும் ஆசிரியர் குறிப்பிடும் ஆறு முதல் எட்டாம் ஆண்டுகளுக்குரிய தடயமாகக் கொள்ளப்பட லாமா? அல்லது போர்த்துக்கேயர் காலத்திற் குரிய சிலுவையாகக் கொள்ளப்படலாமா? இச்சிலுவைக்குரிய சரியான காலம் பற்றித் தெளிவாகக் குறிப்பிட முடியாத நிலையே வரலாற்றாசிரியர் மத்தியில் காணப்படுகின்றது.

இந்திய புதை பொருள் ஆய்வாளர்கள், கல்வெட்டு ஆய்வாளர்களின் கணிப்பின்படி சென்னை மயிலாப்பூர், கேரளா, கோட்டயம் ஆகிய இடங்களில் காணப்பட்ட சிலுவைகள் செய்யப்பட்ட காலம், ஏழாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாக இருக்கலாம்.[37]

மயிலாப்பூரில் காணப்பட்ட சிலுவை அனுராதபுரத்தில் காணப்பட்ட சிலுவையுடன் ஒத்த பண்புகளைக் கொண்டிருந்தால் இரண்டும் ஒரே காலத்திற்குரியவையாக கணிப்பிடலாம். எனினும் அனுராதபுரத்தில் காணப்பட்ட சிலுவை செதுக்கப்பட்ட கருங்கல் ஆலய வழிபாட்டில் பயன்படுத்தப்படாது இல்லங்களில் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம் எனவும் ஒரு கருத்து முன்வைக்கப் படுகின்றது.[38] காலக்கிரமத்தில் அங்கு வாழ்ந்த பாரசீகக் கிறிஸ்தவர்கள் படிப்படியாகக் குறைந்து முற்றாக மறைந்திருக்கலாம். எனினும் அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலுவை செய்யப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட குறிப்பான காலத்தை அறியமுடியாதுள்ளது.

மாட்டீன்கெறே அவர்களின் கணிப்பின்படி அனுராதபுரத்தில் காணப்பட்ட சிலுவை கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்கும் 9ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாக இருக்கலாம்.[39]

அனுராதபுரத்தில் இடம்பெற்ற அகழ்வாய்வை மேற்பார்வைசெய்த அதன் ஆணையாளர் E.R.Ayrton கணிப்பின்படி இச்சிலுவை போர்த்துக்கேயர் காலத்திற்குரியது. ஆனால் இக்கருத்து ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒன்றாகத் தென்படவில்லை. போர்த்துக் கேயர் இலங்கையின் கோட்டை இராச்சியத் தையும், வடபகுதியையும் தமது ஆட்சிக்கு உட்படுத்தியது பதினாறாம் நூற்றாண்டிலாகும். இக்காலத்தில் அனுராதபுர புராதனக் கட்டிடங்களும், சின்னங்களும் இடிபாடுகளா கவும், பெருங்காடுகளாகவும் காணப்பட்டன. இவற்றைப் பார்வையிடுவதற்கு போத்துக்கேயர் வந்துள்ளமைக்கான சான்று காணப்படுகிறது. எனினும் இங்கு போத்துக்கேயர் குடியிருந்திருப் பார் என எண்ணுவது வரலாற்று நிகழ்வுகளோடு ஒழுங்குபடுத்திப்பார்க்க முடியாது. இங்கு வந்த போத்துக்கேயர் கருங்கல்லில் சிலுவை செதுக்கியிருப்பர் என்று எண்ணுவதும் பொருத்தமற்றது.

இலங்கை போர்த்துக்கேயர் காலத்து நிகழ்வுகள் பற்றிக்கூறும் வரலாற்று ஆசிரியர்கள் பவுலோ டீ திறின்னாடே, (Paulo da Trindade, Fernao Quetrz) பேனோகுலைறோஸ் ஆகிய இருவரும் கொழும்புக்கு வடக்கே சிலுவை கண்டு எடுக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றனர்.[40] இங்கு கண்டெடுக்கப்பட்ட இரண்டாவது சிலுவை இது என திறின்னாடே குறிப்பிடு கின்றார். எனினும் இங்கு குறிப்பிடப்படும் சிலுவை அனுராதபுரத்தில் எடுக்கப்பட்ட சிலுவையே என்ற முடிவுக்கு நாம் வரமுடியாது.

கொழும்புக்கு வடக்கே கண்டெடுக்கப் பட்ட சிலுவை போர்த்துக்கேயரது சிலுவையுடன் நெருங்கிய பண்புடையதாகக் காணப்படின், கொழும்பில் காணப்பட்ட சிலுவை தோமையார் கிறிஸ்தவ சபைகளின் சிலுவையாக இருக்கலாம் எனக் கொள்ளப்படுகின்றது. கொழும்பிலும் வாணிபம் காரணமாக பாரசீகக் கிறிஸ்தவ குழுமம் இருந்திருக்கலாம் எனவும் கருத்து முன்வைக்கப்படுகின்றது. மாட்டீன் கெரே அவர்களின் கணிப்பின்படி புராதன இலங்கையில் கிறிஸ்தவ சமூகம் இருந்திருக் கின்றது என்பதற்கு ஆவணச் சான்றுகளோ, அகழ்வாய்வுச் சான்றுகளோ மிகக் குறைவாக வே காணப்படுகின்றது.[41]

## ௬. இலங்கையில் கிறிஸ்தவ ஆயிரம் ஆண்டுகள் மௌனம்

கொஸ்மஸ் இன்டிகொப்பிலிஸ்ரஸ் காலம் முதல் 1506வரையும் இலங்கையில் கிறிஸ்தவம் பற்றியோ அல்லது இலங்கையில் இருந்ததாக அறியப்படும் கிறிஸ்தவ குழுமம் பற்றியோ எந்தவிதமான நம்பகரமான ஆவணங்களும் கிடைத்தில,[42] எனினும் இங்கு கருத்திற் கொள்ளப்படும் ஆயிரம் ஆண்டுகளில் தென் இந்தியாவில் கிறிஸ்தவர்கள் இருந்திருக் கின்றார்கள் என்பதற்கு வரலாற்று ஏடுகள், பயணக்குறிப்புக்கள் சான்று பகர்கின்றன. இதே ஆவணங்கள் இலங்கையில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பது பற்றி மௌனம் சாதிக்கின்றன. இக்காலத்தில் பல பயணிகள்

இலங்கைக்கு வருகை தந்தமை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கிறிஸ்தவக் குழுமங்கள் இங்கு இருந்திருந்தால் அது பற்றிக்குறிக்கத் தவறியிருக்கமாட்டார்கள் எனக் கொள்ள இடமுண்டு. கி.பி 7ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றிலிருந்து இந்தியக் கடற்பரப்பிலும், அவைசார்ந்த இடங்களிலும் இஸ்லாமியருடைய வாணிபத்தொடர்புகள் படிப்படியாக அதிகரித்திருக்கின்றது. இலங்கைக்கான இஸ்லாமியருடைய வருகையும் வாணிபத் தொடர்பை ஏற்படுத்தியமையும் பாரசீககிறிஸ்தவர்களின் வெளியேற்றத்திற் குரிய காரணிகளில் ஒன்றாக இருந்திருக்கலாம். இலங்கையில் குடியேறியிருந்த பாரசீகக்கிறிஸ் தவர்கள் சுதேசிகளுடன் கலப்பு மணம் செய்யவில்லை. மேலும் பாரசீகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு சுதேசிகளை மதமாற்றம் செய்யவில்லை. அத்தோடு இலங்கையில் முன்பு காணப்பட்ட யூத சமூகம் இக்காலப் பகுதியில் மறைந்துள்ளார்கள்.[43] பாரசீகக் கிறிஸ்தவக் குழுமம் படிப்படியாகக் குறைந்து முற்றாக மறைந்தமைக்கு பாரசீகத்தில் எதிர்நோக்கப்பட்ட உள்நாட்டுச் சிக்கல்கள் காரணமாக இங்குள்ள கிறிஸ்தவ குழுமத்திற்கு மத வழிபாட்டு அனுட்டானங்கள் நடத்துவதற் குக் குருமார் அங்கிருந்து அனுப்பப்படாமை ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். ஏனைய சிறு எண்ணிக்கையிலான பாரசீகக் கிறிஸ்தவர்கள் மீண்டும் பாரசீகம் சென்றிருக்கலாம் அல்லது தென் இந்தியா சென்று அங்கு பாரசீகக் குழுமத்துடன் கலந்திருக்கலாம் அல்லது இலங்கைச் சுதேசிகளுடன் திருமணம் செய்து தமது தனித்துவத்தை இழந்திருக்கலாம் எனப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படு கின்றனது.[44]

## 7. யாழ்ப்பாணத்தில் அகழப்பட்ட வெள்ளிநாணயம்.

யாழ்ப்பாணம் கந்தரோடைப்பகுதியில் அகழ்வாய்வினை மேற்கொண்ட யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் செல்லையா கிருஸ்ணராசா அவர்களால் 1995 இல் அங்கு கண்டெடுக்கப்பட்ட வெள்ளி நாணயம் பற்றி முக்கியமான தகவல்களைப் பெறக்கூடியதாயுள்ளது.[45] கந்தரோடைப்பகுதி யில் பெருங்கற்கால மண்படையடுக்கொன்றில் காணப்பட்ட செங்கட்டியுடன் சேர்ந்து பன்னிரண்டு நாணயங்கள் ஒட்டப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்நாணயங்கள் அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி நாணயங்கள் என்பதும் இந்நாணயங்களில் ஒருபக்கத்தில் சூரிய உருவமும் அல்லது வண்டிற் சில்லு ஒன்றிலே விலங்கு ஒன்று இழுத்துச் செல்வது போன்ற உருவமும் காணப்படுகின்றது. மறுபக்கத்தில் சில எழுத்துக்களுடன் நெஸ்ரோறிய கிறிஸ்தவ சிலுவைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.[46]

கந்தரோடை அகழ்வில் எடுக்கப்பட்ட வெள்ளி நாணயம், அங்கு அச்சுக்குத் தரப்பட்டுள்ள சின்னங்கள், எழுத்துக்கள் பற்றி கலாநிதி ரகுபதி முன்வைத்த ஆய்வுக்குறிப்புக் களைக் கொண்டு புராதன யாழ்ப்பாணத்துடன் கிறிஸ்தவத்திற்கு நிலவிய சில முக்கிய குறிப்புக்களைப் பெறக்கூடியதாயுள்ளது. கலாநிதி ரகுபதி அவர்களின் கருத்தில் சில முக்கியமானவற்றை இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத்தமாகும்.[47]

இந்நாணயத்தின் ஒரு பக்கத்தில் சிலுவைச் சின்னத்துடன் "மாத்ரேக்காஸ்ஸ"

என்னும் வாசகம் காணப்படுகிறது. கிறிஸ்தவர்களாக தென் ஆசியாவிற்கு வருகைதந்த கிரேக்கர் அல்லது சீரியர்கள் இந்த நாணயத்தை வெளியிட்டிருக்கலாம் எனக்கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[48]

யாழ் கந்தரோடையில் பெறப்பட்ட வெள்ளி நாணயத்தில் காணப்படும் சிலுவைக்குறி தொடர்பாகக் கலாநிதி ரகுபதி அவர்களின் குறிப்பை இக்கட்டுரையின் முற்பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களுடன் தொடர்பு படுத்தி நோக்கும் போது இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்துடன் புராதன காலத்தில் கிறிஸ்தவத் தொடர்புகள் நிலவியிருக்கலாமா என்றும் வினா எழுகின்றது. தென் இந்தியப் பகுதியான சென்னை, மயிலாப்பூரிலும், கேரளா கோட்டையம் என்னும் இடத்திலும் எடுக்கப்பட்ட இரண்டு சிலுவைகளும் அகழ்வாய்வு நிபுணர்களின் முடிவின்படி கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கும், ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாக இருக்கலாம்[50]

மேலும் இச்சிலுவை சீரிய கிறிஸ்தவ சபைகளினால் பயன்படுத்தப்பட்ட சிலுவையாக இருக்கலாம் என்பது வரலாற்று ஆசிரியர்களின் முடிவாகும். மேலும் கொழும்புக் கோட்டைக்கு வடக்கே போர்த்துக்கேயர் காலத்தில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட இரண்டு சிலுவைகள் கண்டெடுக்கப்பட்டன. இவையும் வாணிபம் காரணமாகக் கொழும்பில் குடியிருந்த சீரியக்கிறிஸ்தவர்களினால் பாவிக்கப்பட்வையாக இருந்திருக்கலாம்.

மேலும் ஆய்வாளர் ரகுபதியின் கருத்துப்படி கந்ரோடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட வெள்ளி நாணயத்தில் காணப்படும் சிலுவை வடிவம் நெஸ்ரோறியக் கிறிஸ்தவ சபையினால் பாவிக்கப்பட்ட சிலுவையாகும். இவை எகிப்து, பாரசீகம்,சீரியா, தென் இந்தியா போன்ற இடங்களில் பரவியிருந்த கிறிஸ்தவ சபையினர் Thomists என்றும் அழைக்கப்படுவதுண்டு.[51] இவர்களே தென் இந்தியாவின் குறிப்பாகக் கேரளப்பகுதியில் காணப்பட்டவர்கள். இலங்கையில் கிறிஸ்தவ சபையினர் காணப்பட்டதாக கொஸ்மஸ் குறிப்பிடும் கிறிஸ்தவ சபையினர் இவர்களாக இருக்கலாம். 1912 இல் அநுராத புரத்தில் அகழ்வாராச்சியின் போது கண்டெடுக்கப்பட்ட கருங்கல்லில் பொறிக்கப்பட்ட சிலுவையின் சின்னம் சீரியக் கிறிஸ்தவ சபையினர் பயன்படுத்திய சிலுவைச் சின்னமாக இருக்கலாம் என்பது ஆய்வாளர் கருத்தாகும். முகலன் மன்னன் ஆட்சிக்காலத்தில் செய்யப்பட் தங்க நாணய சிலுவைச் சின்னம் காணப்படுவதாக, இலங்கை நாணயங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட ஆய்வாளர் கெட்றிங்ரன் என்பவர் குறிப்பிடுகின்றார்[52] எனினும் இந்த நாணயத்தில் காணப்படும் சிலுவைச்சின்னம் எந்தக்கிறிஸ்தவ சபையினால் பயன்படுத் தப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை. இங்கு குறிப்பிடப்படும் தங்க நாணயத்தில் காணப்படும் சிலுவைக் குறியானது கந்தரோடையில் எடுக்கப்பட்ட வெள்ளி நாணயத்தில் காணப்படும் சிலுவைக்குறியுடன் ஒப்பியல் ஆய்வு செய்வது, இது விடயம் தொடர்பாக கூடிய விடயங்களை அறிந்துகொள்வதற்கு உதவியாக அமையும்.

கந்தரோடையில் அகழ்வாய்வின் போது பெறப்பட்ட சிலுவை பொறித்த நாணயம் புராதன யாழ்ப்பாணத்தில் இப்பகுதியில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கலாம் என்றும் சாத்தியத்தைச் சுட்டி

நிற்கின்றது. இலங்கையின் தென்பகுதியிலும், தென் இந்தியாவின் சில பகுதிகளிலும் செயற்பட்ட சிலுவைச் சின்னங்களும், கல்வெட்டு ஆவணங்களும் ஏனைய குறிப்புக்களும் இப்பிராந்தியத்தில் பாரசீகக் கிறிஸ்தவர்கள் குடியிருந்தமைக்கான நிலைப் பாட்டினைச் சுட்டிநிற்கின்றது. கந்தரோடை யிலோ யாழ்ப்பாணத்தின் வேறு எந்த பகுதியிலோ புராதன காலத்தில் ஒரு கிறிஸ்தவக் குழுமம் இருந்திருக்குமானால் அது பாரசீகக் கிறிஸ்தவக் குழுமமாகவே இருந்திருக்க வேண்டும். எனினும் இந்தக் கிறிஸ்தவக் குழுமத்தின் வழிபாட்டு முறையும், இக்குழுமத் தைப்பற்றிய வேறுவகையிலான அகழ்வுத் தடயங்களைப் பெறமுடியாத நிலையே காணப்படும். ஏனெனில் இவர்களின் வழிபாட்டு முறையில் சுரூபங்கள் பயன்படுத்தப்படவில்லை.

எனினும் அகழ்வாய்வின் போது கந்தரோடையில் பெறப்பட்ட வெள்ளிநாணயத் தில் காணப்பட்ட சிலுவைக் குறியைக் கொண்டு மட்டும் கந்தரோடைப் பகுதியில் புராதன யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவர்கள் (சீரியக் கிறிஸ்தவர்கள்) குடியிருந்திருப்பார்கள் என்னும் முடிவிற்கு நாம் வரமுடியாது. இந்தவிடயம் தொடர்பாக மேலும் எதிர்கால ஆய்வினை முன் எடுத்துச் செல்வதற்கு இது நல்லதொரு ஆரம்பத்தடயமாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்த நாள் 15ஆம் திகதி நவம்பர் திங்கள் 1505ஆம் ஆண்டு என வரலாற்று ஆசிரியர் (Queyros) என்பவர் குறிப்பிடுகின்றார். ஆனால் (D.Ferguson) பேர்குசன் என்னும் வரலாற்று ஆசிரியர் போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்தது 1505 அல்ல எனவும், அது 1506 எனவும் குறிப்பிடுகின்றார். (The Discovery of Ceylon by the Portuguese in 1506, JRAC 1907, Vol XIX, NO 59, PP 284 - 400) இலங்கைத் திருச்சபை வரலாற்றின் சமகால முன்னணி ஆசிரியர்களில் ஒருவரான வி. பேணியோலா (V.Perniola) அவர்களின் கணிப்பின்படி, நவம்பர் திங்கள் 1505இல் போர்த்துக்கேயர் முதன்முதல் இலங்கையை அடைந்திருந்தனர். போர்த்துக்கேயர் 1506 இல் மீண்டும் இலங்கை வந்து கோட்டை மன்னனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர். V.Perniola, The Portuguse Period, Vol - I, 1505- 1565, 1989, P.2. வண. பேணியோலா அவர்கள் இயேசு சபையைச் சார்ந்த கத்தோலிக்க மதகுரு. இலங்கைத் திருச்சபை வரலாற்றுடன் தொடர்புடைய முக்கியமான ஆவணங்களைக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு ஆவணக் காப்பகங்களுக்குச் சென்று பல்வேறு மொழிகளில் காணப்படும் ஆவணங்களைச் சேகரித்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவற்றை போத்துக்கேயர் காலத்திற்கு உரியனவற்றை மூன்று தொகுதிகளாகவும், ஒல்லாந்தர் காலத்திற்குரியவற்றை மூன்று தொகுதிகளாகவும் வெளியிட்டுள்ளார். தொடர்ந்து ஆங்கிலேயர் காலத்திற்குரிய

ஆவணங்களை வெளியிடுவதில் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். இது முதல் இவரது நூலில் மேற்கொள் காட்டப்படும் போது (VPP, Vol I, II, III) என்றே குறிப்பிடப்படும்.

2. M.Quere; '*Christianity in Sri Lanka before the Coming of the Portuguese*', **Acquinas Journal**, Vol V, 1978, pp. 127-153.
3. A.M.Mundadan; **History of Christianity in India, Vol-I, from the Beginning Up to the Middle of the sixteenth century**, Bangalore, 1948, P.19
4. *Ibid.*,p.127.
5. *Ibid.*
6. A.M.Mundadan; p.19.
7. M.Quere; pP.128.
8. A.M.Mundadan; p.21.
9. *Ibid.*
10. *Ibid.*, p.29.
11. *Ibid.*, p.30; Y ஆரோக்கியசாமி, "தமிழகத்தில் புனித தோமையார்," மறை அருவி, ஜனவரி – மார்ச், திருச்சி 1987, பக். 05.
12. A.M.Mundadan, p.42; ஆரோக்கியசாமி Y, p.4.
13. Y ஆரோக்கியசாமி, ப. 5.
14. மேலது., ப. 16.
15. மேலது., ப. 14; A.M.Mundadan p. 98.
16. ஆரோக்கியசாமி Y. பக். 17.
17. A.M.Mundadan, p.64.
18. *Ibid.*, p .64.
    திருத்தூதர் தோமா பற்றிக் கூறுகின்ற ஏடுகளில் காலத்தால் முற்பட்ட ஏடாகக் கொள்ளப்படுகின்ற Acts of Judas Thoma என்னும் நூல் செய்திகளைக் கொண்ட அல்லது ஏற்கப்படாத நூலாகவே கொள்ளப்படுகின்றது. இது சீரிய மொழியில் ஏதேச பகுதியில் கி.பி 200 ஆண்டளவில் எழுதப்பட்டது. இந்த நூல் மறைவுச் செய்திகளைக் கொண்ட நூலாகக் கொள்ளப்படினும் மறையியல் ஞானம் சார்ந்ததாகவும் உணர்ச்சி முனைப்புடையதாகவும் ஆக்கப்பட்டுள்ளது. பல ஆய்வாளர்களின் கருத்துப்படி திருத்தூதர் தோமாவின் பணியாற்றிய இரண்டாம் நூற்றாண்டிற்குரிய பாரம்பரியத்தைக் கருப்பொருளாகக் கொண்டே ஆக்கப்பட்டுள்ளது. மேலும் வரலாற்று ஆசிரியர் முண்டாடன் என்பவர் கருத்துப்படி மூன்றாம், நாலாம் நூற்றாண்டு ஏடுகள் வேறுவேறு பகுதிகளில் தோமாவின் இந்தியப் பணி பற்றி தெளிவான மொழியில் பேசுகின்றன. நான்காம் நூற்றாண்டின் பின்பு பல கிறிஸ்தவ சபைகளும் தோமா பற்றிய இந்தியப் பாரம்பரியங்களுக்கு சான்று பகர்கின்றன.
19. M.Quere, pp.128-129.
20. A.M.Mundadan,p.99.
21. *Ibid.*, pp.99-100.

22. E.Tennent, p.566, (This speaks about Sopater).
23. E.Peries, **Studies Historical and Cultural**, Colombo, 1978, pp. 24-25.
24. M.Quere, p.130.
25. *Ibid.*, p.131.
26. *Ibid.*
27. A.M.Mundadan, pp.84 -85.
28. M.Quere, p.133.
29. *Ibid.*,
30. *Ibid.*
31. *Ibid.*,p.134 . The Story of Sigiri என்னும் நூலின்படி மன்னன் காசியப்பன் காலத்தில் பெரிய மிக்காரா என்பவன் தளபதியாகக் கடமையாற்றியுள்ளான். முகலன் மன்னன் காலத்தில் மிக்காராவின் மகன் (சிறிய மிக்காரா) என்பவன் தளபதியாகக் கடமையாற்றினான். எனினும் சூளவம்சம் என்னும் பாளி இலக்கியம் ஒரு மிக்காரா பற்றியே குறிப்பிடுகின்றது. (மேலும் மிக்காரா (பெரிய) மன்னன் தாதுசேனனின் மகள் சங்குக என்பவளை மணம் புரிந்தான்; Quere M.P. 135, Don Peter, '*History of the Church in Sri Lanka*', (ed.) M.D. David, **Asia and Christinity**, Himalaya Publishing House, P.157)
32. *Ibid.*, pp. 134 - 135; Ceylon coins and currency H.W. Codrington எழுதிய நூலில் 44ஆம் படம் முதலன் மன்னன் செய்த தங்க நாணயத்தின் படம் என பேராசிரியர் பரணவிதான குறிப்பிட்டுள்ளார்.
33. *Ibid.*, p.136
34. *Ibid.*
35. *Ibid.*, p.137.; சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய, **A History of the Catholic Church in Ceylon, Period of Beginnings**, 1505-1602 Colombo, 1924 என்னும் நூலில் அனுராதபுரத்திலுள்ள சிலுவை துலக்கமான நிழற்படம் பக்கம் 8 இல் காணப்படுகின்றது.
36. *Ibid.*
37. *Ibid.*, p.138.
38. *Ibid.*
39. *Ibid.*
40. Paulo da Trindade, Conquista spiritual de Oriente, Translated and Annotated E.Peiris and A.Meersan Colombo, 1972, p,139.
41. M.Quere, p.140
42. *Ibid.*, p.141
43. *Ibid.*, p.144
44. *Ibid.*, p.145
45. செல்லையா கிருஸ்ணராசா; தொல்லியலும் யாழ்ப்பாணத்துத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும், யாழ்ப்பாணம், 1998, ப. 49,

46. மேலது., பக். 49. இங்கு கண்டெடுக்கப்பட்ட நாணயத்தைப் பற்றிய ஆய்வு நிலைக் குறிப்புக்களை அறிவதற்கு இந்நாணயத்தின் நிழற்படம் மாலைதீவிலுள்ள கலாநிதி ரகுபதி அவர்களிடம் அனுப்பப்பட்டு, அவர்களின் ஆய்வுக்குறிப்புக்கள் பெறப்பட்டன.
இதில் காணப்படும் சிலுவைச்சின்னம் உரோமப் பேரரசு கொன்ஸ்ரன்ரயின் மன்னன் கி.பி. 313இல் கிறிஸ்தவத்தை அரச மதமாகப் பிரகடனப்படுத்திய பின்பு இச்சிலுவைக் குறியீடு பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

47. கந்தரோடை அகழ்வின் போது எடுக்கப்பட்ட வெள்ளி நாணயத்தின் நிழற்படம் மாலைதீவிலுள்ள கலாநிதி ரகுபதி அவர்களிடம் அனுப்பப்பட்டு அவர்களின் குறிப்புக்கள் பெறப்பட்டன. கலாநிதி ரகுபதி அவர்கள் கிறிஸ்தவத் தொடர்பு பற்றிய பல பயனுள்ள ஆழமான கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

48. செல்லையா கிருஸ்ணராசா, ப .160.

49. மேலது., ப. 161.

50. M.Quere p.138.

51. செல்லையா கிருஸ்ணராசா, ப. 161.

52. M.Quere p.135.